## முன்னாள் எம்எல்ஏ செல்வராஜ் 28ம் ஆண்டு நினைவஞ்சலி பேரணி



### அமைச்சர் சி.வெ.கணேசன் பங்கேற்பு

**விருத்தாசலம், ஆக. 19:** விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைப்பு செயலாளர் செல்வராஜ் 28ம் ஆண்டு நினைவுத் தினத்தை முன்னிட்டு திமுக கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் தலைமையில், தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, விருத்தாசலம் பாலக்கரையில் உள்ள அவரது திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் பாலக்கரையில் இருந்து மௌன ஊர்வலமாக அவரது இல்லம் வரை சென்று அவரது வீட்டில் உள்ள திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினர்.

இதில் நகர செயலாளர் தண்டபாணி, முன்னாள் எம்எல்ஏ கலைச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் வேல்முருகன், பாவாடை, கோவிந்தசாமி, கனக. கோவிந்தசாமி, கோட்டேரி. சுரேஷ், ஆசைத்தம்பி, விருத்தாசலம் நகர்மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், மங்கலம்பேட்டை பேரூராட்சி செயலாளர் பாத்திரக்கடை செல்வம், பேரூராட்சி தலைவர் சம்சாத் பாரி இப்ராஹிம், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் அரங்க. பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர துணை செயலாளர்கள் நம்பிராஜன், சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், அவைத் தலைவர் செங்குட்டுவன், பொருளாளர் மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ★

## 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அகில உலக சுத்த சன்மார்க்கம் 21ம்தேதி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

**கடலூர், ஆக. 19:** அகில உலக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் சார்பில் 10அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் கடலூரில் வருகிற 21ந் தேதி நடக்கிறது. இதுகுறித்து அமைப்பின் மாநில தலைவர் ஜெய.அண்ணாமலை விடுத்துள்ள அறிக்கை: வடலூரில் மதுக்கடை, மாமிசக்கடை, மின்மயான எரியூட்டல் தகன மேடையை அகற்றி, வடலூரை புனித நகரமாக அறிவிக்க வேண்டும். வள்ளலார் ஆஜரான மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தை புனரமைத்து வரலாற்று அடையாள சின்னமாகவும், அருங்காட்சியகமாகவும் அறிவிக்க வேண்டும். வள்ளலாருக்கு வடலூர் பார்வதிபுரம் கிராம மக்கள் இனாம் சாசனம் செய்து கொடுத்த 106 ஏக்கர் பெருவெளி நிலத்தில் ஆக்கிரமிப்பு இடத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசால் அறிவிக்கப்பட்ட, வள்ளலார் பல்லுயிர் காப்பகம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டும். பூரண மதுவிலக்கு, வள்ளலார் பயன்படுத்திய பொருட்கள், அவர் எழுதிய நூல்கள் ஆகியவற்றை அரசு கண்டறிந்து வடலூர் சத்திய தருமச்சாலை, சத்தியஞான சபையில் பார்வைக்கு வைக்க வலியுறுத்தியும், தைப்பூசத்தன்று தமிழகம் முழுவதும் மதுக்கடை, மாமிசக் கடையை மூட வேண்டியும், வடலூர் மாதப்பூச தினத்தன்று கடலூர் மாவட்டத்தில் மதுக்கடை, மாமிசக்கடையை மூட உத்தரவிடக்கோரியும், வடலூரில் சத்திய தருமச்சாலையில், தனிப்பட்ட சங்கங்களின் ஆதிக்கத்தை தடுக்க கோரியும், ஜீவகாருணிய தொண்டு செய்ய வரும் அன்பர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு ஒத்த கருத்துடைய அருளாளர்கள் பெருந்திரளாக பங்கேற்ற வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார். ★



## போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு கூட்டம்

**விருத்தாசலம், ஆக. 19:** விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வட்ட சட்டப் பணிகள் குழு சார்பில் சட்ட உதவி மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி அன்னலட்சுமி தலைமை தாங்கினார். ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். விருத்தாசலம் நீதிமன்றத்தின் ஒன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி சௌபர்ணிகா, 2வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி ஆர்த்தி, மாஜிஸ்திரேட்டுகள் அரவிந்தன், அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதுடன் சட்ட உதவி மற்றும் சட்ட விழிப்புணர்வு குறித்து பேசினர். விருத்தாசலம் இன்ஸ்பெக்டர் (பொ) குமாரி சிறப்புரை ஆற்றினார். தலைமை ஆசிரியர் வினோத்குமார் நன்றி கூறினார்.

## கடலூர் கேபி கிருபா டிஜிட்டல் இல்ல திருமண விழா



### ரோட்டரி சங்க நிர்வாகிகள் வாழ்த்து

**கடலூர், ஆக. 19:** கடலூர் அடுத்த காராமணிகுப்பத்தில் கேபி கிருபா டிஜிட்டல், கடலூர் கோஸ்டல் சிட்டி ரோட்டரி சங்க நிர்வாகி கிருபா கிப்ட்ஸ் நிர்வாக இயக்குனர் கிருபாநிதி- காவியா திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு மணமக்களை கோஸ்டல்சிட்டி ரோட்டரி சங்க நிர்வாகி முன்னாள் உதவி ஆளுநர்கள் மீனா டிரேடர்ஸ் அசோக், நவா எண்டர்பிரைசஸ் வெங்கடேசன், சுதன் பவர் டெக் பூங்குன்றன், கோஸ்டல் சிட்டி ரோட்டரி சங்கமூத்த நிர்வாகி டாக்டர் விஸ்வநாதன், தலைவர் ஏர்டெல் ரவி, செயலாளர் வரதராஜன், எலைட் கன்ஸ்ட்ரக்ஷன் சந்தானகிருஷ்ணன், ஹில்ஸ் மினரல்ஸ் முருகேசன், ராஜேஸ்வரி சிட் பண்ட்ஸ் நிர்மல்ராஜ், கல்கி டிரேடர்ஸ் ஸ்ரீதர், சூர்யா பில்டர்ஸ் விஜய சங்கர், பங்கஜம் பிளானர்ஸ் ஆறுமுகம், கிருஷ்ணா டிம்பர்ஸ் பட்டேல், உதவி ஆளுநர் வெங்கடேசன், முன்னாள் தலைவர் ஏபி ஜுவல்லர்ஸ் ரமேஷ், கணேஷ், பேராசிரியர் டாக்டர் கலைச்செல்வன், பாரத் பில்டர்ஸ் பொறியாளர் சுரேஷ் பாபு, மித்ரன் இன்ஜினியரிங் ஞானமணி, ஏஞ்சல் ஆட்ஸ் ஹரிபாஸ்கர், முன்னாள் பொருளாளர் வேல்முருகன், முன்னாள் செயலாளர் சிவகுருநாதன், பொருளாளர் ஆனந்தராஜ், சிவானந்தம், ஏகே பிரைடல் ஜுவல்லர்ஸ் முன்னாள் தலைவர் கருணாகரன், கார்த்திகேயன், ராஜசேகரன், துரை, ஜேகே ட்ரேடர்ஸ் ஜெயக்குமார், ராமநாதன், அசோகன், ஆதிநாராயணன், முன்னாள் தலைவர் ஹேமலதா ஹைடெக் செந்தில் பாரதி, டாக்டர் முகுந்தன், வெங்கட்ராமன் மற்றும் பல்வேறு ரோட்டரி சங்க நிர்வாகிகள் அப்பர்சாமி, தமிழரசன், வெங்கடேஷ், நாராயணன், தாயுமானவன், முருகன், சன் டைரக்ட் பிரகாஷ், ஆடிட்டர் சுந்தரமூர்த்தி, பொறியாளர் ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

## கரும்பு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்



▶ பெண்ணாடம் அருகே இறையூரில் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

**விருத்தாசலம், ஆக. 19:** தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்ணாடம் அருகே உள்ள இறையூர் பேருந்து நிறுத்தத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மகாலிங்கம், செயலாளர் வரதன், துணைச் செயலாளர் பிரபு, ஜெயபால், சிதம்பரம், கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் ரவீந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 500 விலை அறிவித்து வழங்க வேண்டும். கடந்த கால வாகன வாடகை பாக்கியை உடனே வழங்க வேண்டும். கரும்பு நடவு மானியமாக ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். வெட்டுக்கூலியில் பாதியை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மாநில செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட செயலாளர் சரவணன், வட்ட செயலாளர் அன்பழகன் சிஐடியு பரமசிவம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். பொருளாளர் கொளஞ்சிநாதன் நன்றி கூறினார்.

## தூய்மை பணியாளர் குழந்தைகளுக்கு இலவச கல்வி

### முதல்வருக்கு பாராட்டு



**கடலூர், ஆக. 19:** தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஓய்வு பெற்ற அலுவலர் சங்க மாவட்ட பிரசார செயலாளர் கவிஞர் சிங்காரம் அறிக்கை: தமிழ்நாட்டில் அனைத்து துறைகளிலும் பணிபுரியும் தூய்மை பணியாளர்களை தனியார் வசம் ஒப்படைப்பதை நிறுத்திவிட்டு, அரசாங்கமே பணி நியமனம் செய்து, அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். மேலும் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்கப்பட்டு அவர்களின் பிரச்னைகளை ஆராய வேண்டும். அறிக்கையைப் பெற்ற பிறகு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். சங்கத்தின் கோரிக்கையை ஏற்று தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி வரை இலவச கல்வி வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அனைத்து துறைகளிலும் பணி புரியும் தூய்மை பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு வேலை வாய்ப்பு துறையின் மூலம் மூப்பின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். ★

## சிஐடியு ஆர்ப்பாட்டம்

**கடலூர், ஆக. 19:** கடலூர் லாரன்ஸ் ரோடு அருகே இந்திய தொழிற்சங்க மையம் சி.ஐ.டி.யு. சார்பில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தூய்மை பணியை தனியாருக்கு வழங்கப்பட்டதை திரும்பபெற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் கருப்பையன் தலைமை தாங்கினார். மாவட்ட இணைச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, பாபு, திருமுருகன், சஞ்சய்குமார், சாந்தகுமாரி, மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு பக்கீரான் உள்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.

## தனியார் நிறுவன அதிகாரி மீது தாக்குதல்

**பண்ருட்டி, ஆக. 19:** பண்ருட்டி அடுத்த கட்ட முத்துபாளையம் கிராமத்தை சேர்ந்தவர் உத்திரவேல் (37). இவர் புதுவையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் அதிகாரியாக வேலை செய்து வருகிறார். சம்பவத்தன்று இரவு வேலை முடிந்து வீடு திரும்பினார். பண்ருட்டி அடுத்த கண்டரகோட்டை -திருத்துறையூர் சாலையில் சென்று கொண்டிருந்தபோது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத இருவர், உத்திரவேலுவை சரமாரியாக தாக்கினர். அப்போது அந்த வழியாக வந்தவர்கள் இவரைக் காப்பாற்றி பண்ருட்டி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக கடலூர் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து பண்ருட்டி இன்ஸ்பெக்டர் வேலுமணி, சப்-இன்ஸ்பெக்டர் பிரேம்குமார் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சுதந்திர தின விழா



▶ கடலூர் புனித வளனார் கல்லூரியில் நடந்த சுதந்திர தின விழாவில் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அருமைச்செல்வன் தேசிய கொடி ஏற்றினார்.

## பால்குடம் ஊர்வலம்

**சிதம்பரம், ஆக. 19:** கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள லால்புரம் எல்லை காளியம்மன் கோயில் 26வது ஆண்டு ஆவணி திருவிழா கடந்த 15ம் தேதி காப்பு கட்டுதலுடன் உற்சவம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தினமும் அம்பாள் வீதி உலா நடைபெற்றது. கடந்த 17ம் தேதி 500 பெண்கள் பங்கேற்ற பால்குட ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் எல்லை காளியம்மனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை நடைபெற்றது. அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

## குறிஞ்சிப்பாடி அருணாச்சலா பதின்ம பள்ளியில் சுதந்திர தினவிழா



**குறிஞ்சிப்பாடி, ஆக. 19:** குறிஞ்சிப்பாடி அருணாச்சலா பதின்ம மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா நடந்தது.

பள்ளி தாளாளர் பன்னீர்செல்வம் தலைமையேற்று தேசியக்கொடி ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். செயலர் சட்டநாதன் முன்னிலை வகித்தார். நிர்வாக இயக்குநர் ரவிச்சந்திரன், இயக்குநர்கள் பாலசுப்ரமணியன், குமார், திராவிட அரசு ஆகியோர் சுதந்திர தின வாழ்த்துக்களை கூறி, அதன் பெருமைகளை விளக்கினர். விழாவில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாவட்ட அளவில் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முன்னதாக விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் முதல்வர் ஜோதிலிங்கம் வரவேற்றுப் பேசினார். ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். துணை முதல்வர் அபிராமி நன்றி கூறினார்.

## கட்டுமான தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு



**காட்டுமன்னார்கோவில், ஆக. 19:** காட்டுமன்னார்கோவிலில் கடலூர் மாவட்ட கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. சங்க மாவட்ட தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை தலைவர் திருஞானம் மாநாட்டு கொடியை ஏற்றினார். சி.ஐ.டி.யு சங்க கொடியை சிஐடியு மாவட்ட துணை தலைவர் சுந்தர வடிவேல் ஏற்றினார். வரவேற்பு குழு தலைவர் இளங்கோவன் அனைவரையும் வரவேற்றார். கட்டுமான தொழிலாளர் சங்க மாவட்ட துணை தலைவர் ஜெயசீலன் தீர்மானம் வாசித்தார். சங்க மாநில துணை தலைவர் தங்கமோகனன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.

மாவட்ட பொது செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வேலை அறிக்கை மற்றும் மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன் வரவு, செலவு அறிக்கையை சமர்ப்பித்தனர். சிஐடியு மாவட்ட தலைவர் கருப்பையன், மாவட்ட செயலாளர் பழனிவேல், காட்டுமன்னார் கோவில் பொறியாளர் சங்க தலைவர் கதிர்காமன், செயலாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கூட்டத்தில், கட்டுமான தொழிலாளர்களுக்கு ரூ.3000 ஓய்வூதியம் வழங்க வேண்டும். பெண் தொழிலாளர்களுக்கு 55 வயதில் ஓய்வூதியம் வழங்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில், மாவட்ட இணை செயலாளர்கள் பாபு, கருணாகரன், தனசேகர், சிஐடியு மாநில துணை தலைவர் மகேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். மாநாட்டு வரவேற்புக்குழு செயலாளர் காளிதாஸ் நன்றி கூறினார்.

## சென்னை குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வீராணம் ஏரி நடுவில் சோழர்கள் சிலையை அமைக்க வேண்டும்

### விவசாய சங்கத்தினர் எதிர்பார்ப்பு



**காட்டுமன்னார்கோவில், ஆக. 19:** காட்டுமன்னார் கோவில் வட்டம் லால்பேட்டை முதல் தொடங்கி சேத்தியாத்தோப்பு அருகில் உள்ள பூதங்குடி கிராமத்தில் முடிவடைகிறது வரலாற்று சிறப்புமிக்க ஏரியான வீராணம் ஏரி. மேலும் 14 கி.மீ நீளமுள்ள ஏரி, மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய ஏரியாக விளங்குகிறது. இந்த ஏரியானது காட்டுமன்னார்கோவில் 4கி.மீ தொலைவிலும், சேத்தியாத்தோப்பு 2 கி.மீ. தொலைவிலும், சிதம்பரத்திலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. இது கி.பி. 907 முதல் 953 வரை சோழர்கள் காலத்தில் வெட்டிய ஏரியாகும். இந்த ஏரி ராஜாதித்ய சோழன் என்னும் இளவரசரால் வெட்டப்பட்டது. ராஜாதித்ய சோழன் தந்தையான முதலாம் பராந்தக சோழனின் இயற்பெயர் வீரநாராயணன் ஆகும். இப்பெயரே வீரநாராயணன் ஏரி என அழைக்கப்பட்டது, காலப்போக்கில் இப்பெயர் வீராணம் ஏரி என அழைக்கப்பட்டது.

சோழர்கள் ஆட்சி காலத்தில் விவசாய பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த ஏரி 11 கி.மீ நிளமும், 5.6 கி.மீ அகலமும் கொண்டு கடல்போல காட்சியளிக்கும் இந்த ஏரியின் ஆழம் கடல் மட்டத்தில் இருந்து 47.50 அடிகள், கொள்ளளவு 1445.00 மில்லியன் கன அடிகளாக உள்ளது. ஏரிக்கு தஞ்சை மாவட்டம் கீழணையில் இருந்து வடவாறு மூலமாக தண்ணீர் வரும். இதுதவிர அரியலூர் மாவட்ட எல்லையோர கிராமங்களில் மழை பெய்யும் காலங்களில் கருவாட்டு ஓடை செங்கால் ஓடை ஆகியவைகளின் வழியாக மழைநீர் வரும். கீழ்கரையில் உள்ள 22 பாசன மதகுகள், மேல் கரையில் 6 மதகுகள் வழியாக விவசாய பானத்திற்கு ஏரியில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். ஏரி முழுகொள்ளளவை எட்டும் பட்சத்தில் லால்பேட்டை அருகே உள்ள வெள்ளியங்கால் ஓடை, சேத்தியாத்தோப்பு அருகே உள்ள புதிய வீராணம் அணைக்கட்டு மூலமாக உபரிநீர் வெளியேற்றப்படும். இதுதவிர சென்னை குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக புதிய வீராணம் திட்டம் மூலம் வீராணம் ஏரியில் இருந்து நாளொன்றிற்கு 74 கன அடிகள் வரை ராட்சத குழாய்கள் மூலம் உறிச்சி அனுப்பப்பட்டு வந்தது. கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழர்கள் ஆட்சி புரிந்ததற்கான சான்றுகள் இன்றும் உள்ளது. சோழர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு பிரசித்தி பெற்ற கோயில்கள் ஆறுகள், ஏரிகள் சான்றாகவும் உள்ளது. குறிப்பாக வரலாற்று சிறப்புமிக்க வீரநாராயண பெருமாள் திருக்கோவில் வீராணம் ஏரி அருகிலேயே அமைந்துள்ளது.

மேலும் சோழ இளவரசி குந்தவை வசந்த காலத்தில் வீராணம் ஏரியின் கரையோரத்தில் புத்துணர்வு பெருவதற்காக இங்கு வந்தார். 64 பீடங்களின் எண்ணிக்கையில் ராமானுஜச்சாரியர் 64 சிம்கசாந்திபதிகள் அடிப்படையில் 64 திறப்புகள் திறக்கப்பட்டுள்ள சிறப்புமிக்க ஏரி, வீரநாராயணபுரம் ஏரி என தெரியவருகிறது. இவை குறித்து கல்கி அவர்களால் புத்தகங்களில் விவரிக்கப்பட்டும் உள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் கங்கைகொண்ட சோழபுரம் வந்த பிரதமர் மோடி, ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்றதோடு திருக்கோவில் மாளிகையில் உள்ள சிலைகள், சிற்ப வேலைபாடுகளை பார்வையிட்டார். அவற்றின் வரலாற்றை கேட்டறிந்ததோடு, கோவிலின் முக மண்டபம், மகா மண்டபம் உள்ளிட்டவற்றையும் பார்த்து வியந்தார். அப்போது ராஜராஜனுக்கும், ராஜேந்திரனுக்கும் தமிழகத்தில் சிலை அமைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்தார். இந்த அறிவிப்பு உலக தமிழர்களே உற்று நோக்க வைத்தது. இந்த அறிவிப்பு தமிழர்களின் பெருமையை உலகுக்கு எடுத்துக் கொண்டு செல்லும் என பல்வேறு தரப்பினர் கூறிவருகின்றனர்.

ஏற்கனவே ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ராமானுஜர் அவதரித்து 1,000 ஆண்டுகள் நிறைவுற்றதை கொண்டாடும் வகையில், ஐதராபாத் முச்சிந்தலில் உள்ள சின்ன ஜீயர் ஆசிரமத்தில் 216 அடி உயரத்தில் ராமானுஜருக்கு பஞ்சலோக சிலை உள்ளது. மகாராஷ்டிரா மாநிலம், சிந்துர்க் ராஜ்கோட்டில் 35 அடி சத்ரபதி சிவாஜி சிலை உள்ளது. குஜராத் மாநிலத்தில் நர்மதாவில் 182 மீட்டர் உயரமுள்ள சர்தார் வல்லபாய் படேல் சிலை அமைந்துள்ளது. இது உலகின் மிக உயர்ந்த சிலையாகும். அந்த வரிசையில் சோழர்களின் வரலாற்றை பறைசாற்றும் விதமாக அவர்களது சிலையை திறக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் எழுந்துள்ளது.

இதுதொடர்பாக குமராட்சி விவசாய, வர்த்தக சங்க தலைவர் தமிழ்வாணன் கூறுகையில், வீராணம் ஏரியானது சோழர் காலத்து வரலாற்று சிறப்புமிக்க ஏரியாகும். உள்நாட்டு மீனவர்கள், விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கி வருகிறது. பிரதமர் அறிவித்தபடி வீராணம் ஏரியில் சோழர்களின் சிலையை அமைக்க வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது. ஏனென்றால் சோழர்களால் உருவாக்கப்பட்ட வீராணம் ஏரிக்கும் அது பெருமை சேர்க்கும் என்றார்.

மேலும் வீராணம் ஏரி பாசன சங்க தலைவர் பாலு கூறும்போது, வரலாற்று சிறப்புமிக்க வீராணம் ஏரியை சுற்றுலாத்தலமாக மாற்ற வேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாக உள்ளது. இதன் முன்னோட்டமாக சோழர்களால் உருவாக்கப்பட்ட வீராணம் ஏரி நடுவில் சோழர்களுக்கு வெண்கல சிலை அமைத்து சோழர்களின் வரலாற்றை உலகிற்கு பறைசாற்ற வேண்டும் என்றார்.

### வாழ்வாதாரம் மேம்படும்

இதுதொடர்பாக அப்பகுதி சமூக ஆர்வலர்களிடம் கேட்டபோது, கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரதமர் கூறியது வெத்து அறிவிப்பாக இருக்கக் கூடாது. வரலாற்று சிறப்புமிக்க வீராணம் ஏரியில் சோழர்களுக்கு வெண்கல சிலை அமைக்கப்படும் பட்சத்தில் இப்பகுதி பொருளாதாரத்தில் மென் மேலும் வளர்ச்சியடையும். பொதுமக்களின் வாழ்வாதாரமும் மேம்படும் என்றனர்.


**சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 501, சால்கான் ஆரம், ஐசோலா மாவட்ட மையம், புது டெல்லி-110025
CIN:U65900DL2020PLC366027

**ஏல அறிவிப்பு**

சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெடின் பின்வரும் கடன்தாரர்களுக்கு தெரிவிக்கப்படுவது என்னவென்றால், அவர்களால் வங்கியிலிருந்து பெறப்பட்ட தங்க கடன்/கள் தொடர்பாக இதுவரை அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அதிலும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் கடன் தொகையை திருப்பித் தரவில்லை. அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், வங்கியில் கடனீடாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கடன் பெறப்பட்ட வங்கிக் கிளையில் காலை 11:00 மணிக்கு ஏலம் விடப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்கள், கணக்கை வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரிய அளவில் இந்த ஏலத்தில் பங்கெடுக்க முடியும்.

**ஏலத் தேதி 28.08.2025 @ காலை 11:00 மணி**

| வ.எண் | கிளை | கணக்கு எண். | கணக்கு வைத்திருப்பவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 104142512357 | பூவரசன் M |

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்த ஏலத்திலிருந்து எந்த கணக்கையும் நீக்கவோ அல்லது ஏலத்தை ரத்து செய்யவோ வங்கி உரிமையைப் பெற்றிருக்கிறது.

அதிகாரப்பூர்வ அதிகாரி, சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்